# கோபிசெட்டிபாளையம் நகராட்சி

## 25.01.2023 ந் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் டிசம்பர் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மான எண்.345**

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்
**பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மான எண்.346** .

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் டிசம்பர் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மான எண்.347**

4. இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் டிசம்பர் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மான எண்.348**

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் வார்டு **–B,** பிளாக் ,9 – T.S.No. 259 சத்தி மெயின் ரோடு பிரதான சாலையில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். சிலை அருகில் உள்ள காலியிடம் தொடர்பாக நகராட்சிக்கு எதிராக திரு.டி.சேகர் என்பவரால் மாண்புமிகு கோபிசெட்டிபாளையம் சார்பு நீதிமன்றத்தில் IA.NO.1/2019 மற்றும் OS.NO.26/2011 இன் படி வழக்கு தொடரப்பட்டு சார்பு நீதிமன்றத்தால் 04.10.2019 இல் தீர்ப்பாணை வரப்பெற்றது. இத்தீர்ப்பாணையை எதிர்த்து 3 வது கூடுதல் மாவட்ட Sessons நீதிமன்றத்தில் வழக்கு எண்.1/2020 இன் படி மேல்முறையீடு செய்யப்பட்டது.மேற்படி வழக்கில் 08.09.2021இல் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பாணை வரப்பெற்றது.

இந்நிலையில் மேற்படி வழக்கு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் 2வது மேல்முறையீடு வழக்கு எண்.776/2022 இன் படி திரு.டி.சேகர் என்பவரால் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு இவ்வழக்கானது விசாரணைக்கு வர உள்ளதால் வக்காளத்து அனுப்பி வைக்குமாறும் இவ்வழக்கிற்கான கட்டணம் ரூ.20,000/– வழங்குமாறும் சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களால்01.12.2022 ஆம் நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி மேல்முறையீடு வழக்கில் நகராட்சியின் சார்பாக எதிர் வழக்காட அரசு வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களை நியமனம் செய்யவும் இதற்கான கட்டணம் ரூ.20,000/– வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.
**அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.349**

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

6. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் 2021–2022 ஆம் ஆண்டின் வருவாய் நிதி மற்றும் மூலதன நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, கல்வி நிதி ஆகிய கணக்குகளில் உள்ள ஆண்டு கணக்குகளில் சொத்து வரி, குடிநீர் வரி, கல்வி வரி, மற்றும் நூலக வரி ஆகிய இனங்களில் நிலுவை தொகை ரூ.49,28,254/– உள்ளது. ஆனால் இணையவழி கேட்பு, வசூல், நிலுவை (ONLINE DCB) அறிக்கையின் படி ரூ.44,67,235/– மட்டுமே நிலுவையாக உள்ளது. கணினியில் நிலுவை

உள்ள இனங்களுக்கு மட்டுமே ரசீது வழங்க இயலும் என்பதால் ஆண்டு கணக்கிற்கும் இணையவழி கேட்பு, வசூல், நிலுவை அறிக்கைக்கும் உள்ள வித்தியாசத்தொகை ரூ.4,61,019/- ஐ சம்மந்தப்பட்ட ஆண்டு கணக்குகளில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2816/2022/அ1)

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.**
**அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.350**

7. இந்நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-23 திட்டத்தின் கீழ் கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் தற்போதுள்ள பேருந்து நிலையம் மேம்படுத்துதல். சர்வே எண்.46,48, வார்டு -D, பிளாக் -15 மேம்படுத்தல் மதிப்பீடு ரூ.66,00,000 பணியினை செய்வதற்கு 27.12.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளார்கள் .

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொழில்நுட்ப தகுதி விவரம் |
|---|---|---|
| 1. | M/s.திவ்ய தர்ஷினி &கோ<br>144 A , தொட்டிபாளையம் ,<br>முத்தூர் | தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளார் |
| 2. | M/s. ஸ்ரீ கணேஷ் லக்ஷ்மி<br>கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br>பிரைவேட் லிமிடெட்<br>சாலையன்காட்டுபாளையம்<br>முத்தூர் | தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளார் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் இரண்டு ஒப்பந்ததாரர்களுடைய ஒப்பந்த விலை பட்டியலில் (Price Bid) திறக்க 29.12.2022 ல் அறிவிப்பு வழங்கப்பட்டு விலைப்புள்ளி திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.திவ்ய தர்ஷினி &கோ<br>144 A , தொட்டிபாளையம் ,<br>முத்தூர் | 0.37 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2. | M/s. ஸ்ரீ கணேஷ் லக்ஷ்மி<br>கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்<br>பிரைவேட் லிமிடெட்<br>சாலையன்காட்டுபாளையம்<br>முத்தூர் | 10.66 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டை விட 0.37% சதவீதம் குறைவாக வழங்கியுள்ள M/s.திவ்ய தர்ஷினி & கோ ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1503/2022 /இ1)

<u>அலுவலகக்குறிப்பு :-</u>

அ).. மன்றம் அனுமதிக்கலாம்

ஆ). மேற்படி பணிகளில் வ.எண்.1 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.திவ்ய தர்ஷினி** & **கோ** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

இ). பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு அ) அனுமதிக்கப்பட்டது.**
**ஆ) மற்றும் இ) ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.351**

8. இந்நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022-23 திட்டத்தின் கீழ் கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் தற்போதுள்ள வார்டு எண்.C, சர்வே எண்.51, பிளாக் எண்.25ல் வாரச்சந்தை கட்டும் பணி மதிப்பீடு ரூ.1,73,00,000 பணியினை செய்வதற்கு 27.12.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளார்கள் .

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொழில்நுட்ப தகுதி விவரம் |
|---|---|---|
| 1. | M/s.திவ்ய தர்ஷினி &கோ 144 A , தொட்டிபாளையம், முத்தூர் | தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளார் |
| 2. | M/s. ஸ்ரீ கணேஷ் லக்ஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சாலையன்காட்டுபாளையம் முத்தூர் | தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளார் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் இரண்டு ஒப்பந்ததாரர்களுடைய ஒப்பந்த விலை பட்டியலில் (Price Bid) திறக்க 29.12.2022 ல் அறிவிப்பு வழங்கப்பட்டு விலைப்புள்ளி திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.திவ்ய தர்ஷினி &கோ 144 A , தொட்டிபாளையம் , முத்தூர் | 0.01 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2. | M/s. ஸ்ரீ கணேஷ் லக்ஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சாலையன்காட்டுபாளையம் முத்தூர் | 16.91 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டை விட 0.01% சதவீதம் குறைவாக வழங்கியுள்ள M/s.திவ்ய தர்ஷினி &கோ ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1503/2022 /இ1)

**அலுவலகக்குறிப்பு :-**

அ.). மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) மேற்படி பணிகளில் வ.எண்.1 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.திவ்ய தர்ஷினி** & கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

இ) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு அ) அனுமதிக்கப்பட்டது.**
**ஆ) மற்றும் இ) ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.352**

9. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 24826/2022/ss1 நாள் 26.12.2022 ல் இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2022-2023 (Truip) கீழ் 98 எண்ணிக்கையிலான சாலைகளை மேம்படுத்த கீழ்க்கண்ட 10 சிப்பங்களில் நிர்வாக அனுமதி 692 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

பணிகளின் விவரம்

| வ.எண் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீடு |
|---|---|---|---|
| | சிப்பம்–1 | | |
| 1 | 1 | முல்லை நகர் மெயின் வீதி | 11.86 |
| 2 | 2 | ஜெயராம் வீதி | 7.12 |
| 3 | 2 | ராமர் எக்ஸ்டன்சன் 6 | 8.85 |
| 4 | 5 | வாசு லே அவுட் 2 வீதி | 8.64 |
| 5 | 6 | தாசப்பன் 2 வது வீதி | 4.52 |
| 6 | 6 | தாசப்பன் முதல் வீதி | 8.72 |
| 7 | 6 | மாதேஸ்வரன் கோவில் மெயின் முதல் வீதி | 6.17 |
| 8 | 6 | மாதேஸ்வரன் கோவில் மெயின் இரண்டாம் வீதி | 6.43 |
| 9 | 6 | சதாசிவம் முதல் வீதி | 9.16 |
| 10 | 6 | சதாசிவம் இரண்டாம் வீதி | 10.53 |
| | | | 82.00 |
| | சிப்பம் 2 | | |
| 11 | 6 | ஆண்டவர் வீதி | 5.21 |
| 12 | 6 | தூரி சுப்பிரமணியம் வீதி | 4.18 |
| 13 | 7 | கருமாயா இரண்டாம் வீதி 1 | 5.98 |
| 14 | 7 | ஜெயராம்  வீதி | 3.21 |
| 15 | 7 | கிழக்கு பார்க் வீதி | 5.31 |
| 16 | 7 | வடக்கு பார்க் வீதி | 10.53 |
| 17 | 7 | திருவேங்கடன் வீதி | 4.82 |
| 18 | 7 | ராமநாதன் வீதி | 8.21 |
| 19 | 8 | மங்கம்மா வீதி1 | 5.26 |
| 20 | 8 | மங்கம்மா வீதி2 | 4.79 |
| | | | 57.50 |
| | சிப்பம் 3 | | |
| 21 | 8 | கருமாயா 5 வது வீதி | 6.68 |
| 22 | 8 | கருமாயா 4 வது வீதி | 5.20 |
| 23 | 9 | பதிவிலாஸ் வீதி ( காமாட்சியம்மன் கோவில் வீதி முதல் LIG காலனி வரை | 32.20 |
| 24 | 9 | காமாட்சியம்மன் கோவில் விதி | 11.52 |
| 25 | 9 | காந்தி நகர் முதல் மெயின் வீதி | 8.91 |
| 26 | 9 | காந்தி நகர் இரண்டாம் மெயின் வீதி | 6.10 |
| 27 | 9 | கம்பர் கிராஸ் ரோடு 1 | 5.94 |
| 28 | 9 | கம்பர் மெயின் ரோடு | 4.57 |
| 29 | 9 | கம்பர் கிராஸ் ரோடு 2 | 2.15 |
| 30 | 9 | கம்பர் வீதி | 8.33 |
| | | | 91.60 |
| | சிப்பம்4 | | |
| 31 | 9 | கூட்டுறவு நகர் | 11.48 |
| 32 | 9 | கருமாரியம்மன் கோவில் வீதி | 3.80 |
| 33 | 9 | JS நகர் Cross வீதி | 1.22 |
| 34 | 10 | மின் நகர் முதல் வீதி | 4.76 |

| | | | |
|---|---|---|---|
| 35 | 10 | மின் நகர் முதல் cross வீதி | 1.93 |
| 36 | 10 | மின் நகர் இரண்டாம் cross வீதி | 1.24 |
| 37 | 10 | மின் நகர் இரண்டாம் வீதி | 2.75 |
| 38 | 10 | மின் நகர் இரண்டாம் cross முதல் வீதி | 2.37 |
| 39 | 10 | மின்நகர் மூன்றாம் வீதி | 2.53 |
| 40 | 10 | மின்நகர் மூன்றாம் Cross வீதி | 1.42 |
| | | | 33.50 |
| | சிப்பம் 5 | | |
| 41 | 10 | மின் நகர் நான்காம் வீதி | 4.28 |
| 42 | 10 | கன்னிகா பரமேஸ்வரி முதல் வீதி | 4.41 |
| 43 | 12 | காளியண்ணன் வீதி | 6.67 |
| 44 | 12 | வெங்கட்ராமன் வீதி | 9.61 |
| 45 | 12 | பாஸ்கரன் வீதி | 2.59 |
| 46 | 12 | பாஸ்கரன் வீதி1 | 1.16 |
| 47 | 14 | திருமலை நகர் 3 வது வீதி | 9.18 |
| 48 | 14 | G.C.R Nagar மெயின் வீதி | 4.84 |
| 49 | 14 | G.C.R Nagar முதல் Cross வீதி | 3.26 |
| | | | 46.00 |
| | சிப்பம்6 | | |
| 50 | 14 | G.C.R Nagar 2 வது Cross வீதி | 3.51 |
| 51 | 14 | G.C.R Nagar 3 வது Cross வீதி | 3.12 |
| 52 | 14 | சென்னியப்பா நகர் முதல் வீதி (பகுதி) | 9.72 |
| 53 | 15 | ஹனுமான் கோவில் வீதி | 18.34 |
| 54 | 20 | பி.எம்.கே. ரைஸ் மில் ரோடு | 7.86 |
| 55 | 20 | பி.எம்.கே. ரைஸ் மில் ரோடு1 | 7.80 |
| 56 | 20 | முருகண்ணன் வீதி | 5.75 |
| 57 | 21 | மணிமேகலை வீதி | 10.30 |
| 58 | 21 | காமாட்சியம்மன் கோவில் வீதி1 | 5.89 |
| 59 | 21 | காமாட்சியம்மன் கோவில் வீதி2 | 4.11 |
| | | | 76.40 |
| | சிப்பம் 7 | | |
| 60 | 21 | காமாட்சியம்மன் கோவில் வீதி3 | 5.19 |
| 61 | 21 | பழைய போலீஸ் ஸ்டேசன் வீதி | 3.81 |
| 62 | 21 | SDN காலனி1 | 5.10 |
| 63 | 21 | SDN காலனி3 | 5.61 |
| 64 | 21 | SDN காலனி4 | 1.91 |
| 65 | 21 | SDN காலனி மெயின் வீதி | 7.28 |
| 66 | 22 | ஜின்னிங் பேக்டரி வீதி 1 | 11.47 |
| 67 | 22 | ஜின்னிங் பேக்டரி வீதி 2 | 2.40 |
| 68 | 22 | முத்துஸா வீதி1 | 7.87 |
| 69 | 22 | முத்துஸா வீதி2 | 1.36 |
| | சிப்பம் 8 | | 52.00 |
| 70 | 23 | ராம் நகர் மெயின் ரோடு | 11.90 |
| 71 | 24 | அன்பு நகர் இரண்டாம் வீதி | 10.54 |
| 72 | 24 | அன்பு நகர் (லட்சுமி லே அவுட்) | 11.56 |
| 73 | 24 | அன்பு நகர் இரண்டாம் cross வீதி | 4.34 |
| 74 | 24 | தாமு நகர் | 5.42 |
| 75 | 24 | அருண் கார்டன் முதல் Cross வீதி | 2.03 |

| | | | |
|---|---|---|---|
| 76 | 24 | அருண் கார்டன் இரண்டாம் Cross வீதி | 1.73 |
| 77 | 24 | அருண் கார்டன் மூன்றாம் Cross வீதி | 5.55 |
| 78 | 24 | அருண் கார்டன் | 3.20 |
| 79 | 25 | திரு.வி.க வீதி 5 | 13.73 |
| | | | 70.00 |
| | **சிப்பம் 9** | | |
| 80 | 28 | வடக்கு தேர் வீதி | 5.35 |
| 81 | 28 | கிழக்கு தேர் வீதி | 3.27 |
| 82 | 28 | தெற்கு தேர் வீதி | 2.43 |
| 83 | 28 | மேற்கு தேர் வீதி | 2.06 |
| 84 | 28 | சுப்ரமணியம் விதி | 2.22 |
| 85 | 28 | காட்டு வலவு | 4.63 |
| 86 | 29 | மில் ரோடு (பகுதி) | 4.67 |
| 87 | 29 | முத்து நகர் 1 | 5.64 |
| 88 | 29 | முத்து நகர் 2 | 3.82 |
| 89 | 29 | முத்து நகர் 3 | 1.91 |
| | | | 36.00 |
| | **சிப்பம் 10** | | |
| 90 | 29 | பெரியண்ணன் விதி 1 (பகுதி) | 12.04 |
| 91 | 29 | பழனியப்பன் வீதி | 7.57 |
| 92 | 29 | மாரியம்மன் கோவில் வீதி3 | 12.59 |
| 93 | 29 | அன்பு நகர் முதல் வீதி | 10.60 |
| 94 | 30 | செங்கோட்டையன் காலனி (பெரியார் நகர் 3) | 2.83 |
| 95 | 30 | செங்கோட்டையன் காலனி (பெரியார் நகர் 4) | 2.77 |
| 96 | 1 | கணபதி நகர் மூன்றாம் வீதி | 6.81 |
| 97 | 1 | கணபதி நகர் மூன்றாவது Cross முதல் Cut ரோடு | 3.43 |
| 98 | 30 | Head Works ரோடு | 88.36 |
| | | | 147.00 |
| | | Grand Total | 692.00 |

மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவரச அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்ததை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1) அனுமதிக்கப்பட்டது.**
**2) ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மான எண்.353**

10. இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் பயன்படுத்தும் TVS டோக்கன் ரோல் இயந்திரம் பழுதடைந்து சரி செய்ய இயலாததால், புதிய இயந்திரம் வாங்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.20,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.9721/2020/எச்2)

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.354**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சி 2022–2023 ம் நிதியாண்டு பொது நிதி, குடிநீர் நிதி, கல்வி நிதி ஆகிய கணக்குகள் வாரியாக தயார் செய்து தணிக்கைக்கு முன்னிலைப்படுத்த தனியார் கணக்கு ஆலோசகர் (Account Consultant) மூலம் பணிகள் மேற்கொண்டு முடித்து கொடுக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/– மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2273/2020/பி1)

**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.355**

12. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் ஜவஹர்லால் நேரு தெரு, நகரளவை எண்.56 பொது நடைபாதையை அடைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக திரு.கே.டி.சந்தானம், எஸ்.ராஜேந்திரன் மீது திரு.கே.ஏ.வெங்கிடுசாமி மற்றும் திரு.ஏ.முருகன் ஆகியோர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.205/2022 இன் படி வழக்கு தொடரப்பட்டு இவ்வழக்கில் ஆணையாளரை மூன்றாவது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு வழக்கு தொரடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சியின் சார்பாக எதிர் வழக்காட நகராட்சி வழக்கறிஞர் திரு.யு.கே.காணிவேலுசாமி தமது 03.01.2022 ஆம் நாளிட்ட கடிதத்தில் வழக்கு கட்டணம் ரூ.3000/– வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சியின் சார்பாக வழக்காட வக்காளத்து மற்றும் வழக்கு குறித்து விவரத்தை இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2492/2022/எப்1 நாள்.30.11.2022 இல் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, மேற்படி வழக்கு கட்டணம் ரூ.3000/– நகராட்சி வழக்கறிஞர்க்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.356**

13. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட லக்கம்பட்டி கிராமம் வார்டு A, பிளாக் –1, நகரளவை எண்.87/7 (Old SF No.96) சாய் அபிராமி நகர் எக்ஸ்டன்சன் பகுதியில் மனைபிரிவுதாரர்களான திரு.பி.மகேஷ்குமார், திருமதி.எஸ்.கோதை நாச்சியார் மற்றும் திருமதி.பழனியம்மாள் ஆகியோருக்கு சொந்தமான 900.50 சதுர மீட்டர் இடத்திற்கு SWP/DTCP/ERODE/Layout Approval No.90/2022 என எண்ணிடப்பட்டு உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்கள் உத்திரவு ந.க.எண்.ERD/77XP518W/2022/TCP நாள்.13.12.2022இன் படி தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி உத்திவிடப்பட்டுள்ளது.

மேற்படி மனை உட்பிரிவின் மனுதாரர்களான திரு.பி.மகேஷ்குமார், திருமதி.எஸ்.கோதை நாச்சியார் மற்றும் திருமதி.பழனியம்மாள் என்பவர்களின் மனையிடத்தினை ஆய்வு செய்ததில் மனையிடமானது 900.50 சதுர மீட்டர் பரப்பளவிற்குள் மூன்று மனைகள் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 22 1/4 செண்ட் கொண்ட இடமாகும். இதன் வடக்கில் நகரளவை எண்.87/1B, 1A நிலமும், தெற்கில் கிழமேலாக செல்லும் சாய் அபிராமி நகர் எக்ஸ்டன்சன் 12.00 மீட்டர் அகல நகராட்சி சாலையும் கிழக்கில் நகரளவை எண்.87/1B, 1A நிலமும், மேற்கில் நகரளவை எண்.61 நிலுமும் உள்ளது. இதன் அருகில் சுடுகாடு மற்றும் நீர்நிலைகள் ஏதுமில்லை. மேலும், மனுதாரரால் மனை உட்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கான கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, லக்கம்பட்டி கிராமம் வார்டு A, பிளாக் –1, நகரளவை எண்.87/7 சாய் அபிராமி நகர் எக்ஸ்டன்சன் பகுதியில் உள்ள 900.50 சதுர மீட்டர் இடத்திற்கு (22 1/4 செண்ட்) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களால் SWP/DTCP/ERODE/Layout Approval No.90/2022 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதற்கு மேற்காணும் விபரங்களின் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் உத்திரவில் குறிப்பிட்டுள்ள பொது நிபந்தனை 1 முதல் 6 வரையிலும், சிறப்பு நிபந்தனை 1 முதல் 4 வரைக்கும் உட்பட்டும் மேலும், மேற்படி இடமானது மற்ற துறைகளுக்கு எவ்வித நில ஆர்ஜிதமும் செய்யப்படவில்லை என வட்டாட்சியரின் சான்று பெறப்பட்டபின் குடியிருப்பு மனைப்பிரிவு உட்பிரிவிற்கு இறுதி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2812/2022/எப்1)
**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.357**

14. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் வார்டு B, பிளாக் –23, நகரளவை எண்.13/19 1012 சதுர மீட்டர் (25 சென்ட்) நான்கு மனைகளுக்கு பைரவா நகர் மற்றும் கோடீஸ்வரா நகர் பகுதியில் மனைபிரிவுதாரரான திருமதி,எஸ்.காஞ்சனா அவர்களுக்கு சொந்தமான 1012 சதுர மீட்டர் இடத்திற்கு SWP/DTCP/ERODE/Layout Approval No.30/2022 என எண்ணிடப்பட்டு உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்கள் உத்திரவு ந.க.எண்.ERD/ABYCZRXM/2022/TCP நாள்.11.10.2022இன் படி தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி உத்திவிடப்பட்டுள்ளது.

மேற்படி மனையிடங்களின் மனுதாரரான திருமதி,எஸ்.காஞ்சனா என்பவரின் மனையிடங்களை ஆய்வு செய்ததில் மனையிடமானது 1012 சதுர மீட்டர் பரப்பளவிற்குள் நான்கு மனைகள் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 25 சென்ட் கொண்ட இடமாகும். இதன் வடக்கில் நகரளவை எண்.13/3A நிலமும் தெற்கில் நகரளவை எண்.13/20 நிலமும், கிழக்கில் நகரளவை எண்.23/17 நிலமும், மேற்கில் தென்வடலாக செல்லும் நகராட்சி சாலையும் உள்ளது. இதன் அருகில் சுடுகாடு மற்றும் நீர்நிலைகள் ஏதுமில்லை. மேலும், மனுதாரரால் மனை உட்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கான கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, வீரபாண்டி கிராமம் வார்டு B, பிளாக் –23, நகரளவை எண்.13/19 பைரவா நகர் மற்றும் கோடீஸ்வரா நகர் பகுதியில் உள்ள 1012 சதுர மீட்டர் இடத்திற்கு (25 சென்ட்) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களால் SWP/DTCP/ERODE/Layout Approval No.30/2022 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதற்கு மேற்காணும் விபரங்களின் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் உத்திரவில் குறிப்பிட்டுள்ள பொது நிபந்தனை 1 முதல் 6 வரையிலும், சிறப்பு நிபந்தனை 1 முதல் 4 வரைக்கும் உட்பட்டும் மேலும், மேற்படி இடமானது மற்ற துறைகளுக்கு எவ்வித நில ஆர்ஜிதமும் செய்யப்படவில்லை என வட்டாட்சியரின் சான்று பெறப்பட்டபின் குடியிருப்பு மனைப்பிரிவு உட்பிரிவிற்கு இறுதி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2248/2022/எப்1)

**அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.**
**அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.358**

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மொடச்சூர் வாரச் சந்தை வளாகத்தில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க திட்டத்தின் கீழ் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் 2017 - 2018 ஆம் ஆண்டில் வீடற்றவர்கள் தங்குவதற்கென இரவு நேர தங்கும் விடுதி கட்டிமுடிக்கப்பட்டு RURAL EDUCATION ENVIRONMENT DEVELOPMENT AND MULTIPURPOSE SOCIETY 121/1. கல்ராமணி, மொடச்சூர், கோபிசெட்டிபாளையம் என்னும் தன்னார்வ அமைப்பினரால் பராமரிக்கப்பட்டு வந்தது இவர்களது அனுமதி காலம் 31.08.2022 உடன் முடிவடைந்தது இதனை தொடர்ந்து தற்போது நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க வழிகாட்டுதலில் வீடற்றோர் இரவு நேர தங்கும் விடுதியை நிர்வகிக்க மற்றும் பராமரிப்பு பணியினை தொண்டு நிறுவனங்களுடன் ஒப்படைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தொண்டு நிறுவனமிடம் ஒப்படைக்க 10.12.2022 அன்று தினத்தந்தி நாளிதழில் தொண்டு நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி செய்தி வெளியிடப்பட்டது. இதனை தொடர்ந்து கீழ்காணும் விவரப்படி தொண்டு நிறுவனங்களிடமிருந்து இந்நகராட்சிக்கு விண்ணப்பங்கள் வரப்பெற்றது.

| வ.எண் | தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பெயர் | விண்ணப்பிக்கப்பட்ட நாள் |
|---|---|---|
| 1 | Atchayam Trust, Erode | 12.12.2022 |
| 2 | Public Welfare and development Society, Gobichettipalayam | 13.12.2022& 30.12.2022 |
| 3 | Jeevitham Foundation,Erode | 13.12.2022 |
| 4 | Rights Education & Development Center, Sathyamangalam | 14.12.2022 |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விண்ணப்பங்களை தேர்வு செய்ய இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.1508/2021/எச்1 நாள்.26.12.2022 இன் படி கீழ்காணும் அலுவலர்கள் அடங்கிய கூராய்வு கமிட்டி அமைக்கப்பட்டது.

1. நகர்மன்றத் தலைவர் 2. ஆணையாளர் 3. பொறியாளர் 4. நகரமைப்பு ஆய்வாளர் 5. சுகாதார அலுவலர் 6. மேலாளர் 7. கணக்கர் (ம) வருவாய் ஆய்வாளர் (பொ) 8. சமுதாய அமைப்பாளர்.

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற தொண்டு நிறுவனங்களின் விண்ணப்பங்களின் மீது விசாரணை மேற்கொள்வதற்கு சம்மந்தப்பட்ட நிறுவனங்களின் அலைபேசியின் வாயிலாக 06.01.2023 அன்று உரிய ஆவணங்களுடன் நேரில் ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டது. இதில் வரிசை எண்.1 மற்றும் 4 இல் உள்ள நிறுவனங்கள் மட்டுமே உரிய ஆவணங்களுடன் ஆஜராகினர். மேற்காணும் கூராய்வு கமிட்டி விசாரணையில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க வழிகாட்டுதலின் படியும் சேவை மனப்பான்மையோடும் இலவசமாக நிர்வகிக்க மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து விசாரணை மற்றும் மேற்படி இரண்டு நிறுவனங்களின் ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில் வரிசை எண்.1 இல் உள்ள நிறுவனத்தாரால் இரவு நேர தங்கும் விடுதி நடத்துவதில் முன்அனுபவம் உள்ளதற்கான புகைப்பட நகல், காணொலி ஆவணம் (Video) மற்று ஈரோடு மாநகராட்சியின் இரவு நேர தங்கும் விடுதி நடத்தி வருவதற்கான ஆவணங்கள் கூராய்வு கமிட்டியால் பார்வையிடப்பட்டது. வரிசை எண்.4 இல் உள்ள நிறுவனத்தாரின் ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டதில் இரவு நேர தங்கும் விடுதியை தவிர்த்து பிற சமூக சேவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது தெரிய வந்தது. இதில் இரவு நேர தங்கும் விடுதி நடத்துவதில் இவர்களுக்கு முன் அனுபவம் இல்லை என்பது கமிட்டியினரால் முடிவு செய்யப்பட்டது. மேலும் வரிசை எண்.2 மற்றும் 3 இல் உள்ள நிறுவனங்கள் கூராய்வு கமிட்டியின் விசாரணைக்கு வரவில்லை.

எனவே தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத் திட்டத்தின் கீழ் வீடற்றோர்கள் தங்கும் விடுதி நடத்துவதில் ஆவணங்கள் உள்ளதாலும் இது தொடர்பாக பல விருதுகள் இந்நிறுவனம் பெற்றுள்ளதாலும் இப்பணியினை மேற்கொள்வதில் நல்ல முன் அனுபவம் உள்ளதாலும் வரிசை எண்.1 இல் உள்ள அட்சயம் டிரஸ்ட்,ஈரோடு தொண்டு நிறுவனத்திற்கு மொடச்சூர் வாரச்சந்தையில் உள்ள வீடற்றோர் இரவு நேர தங்கும் விடுதி நிர்வகிக்க மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள உத்தரவு வழங்கலாம் என இக்கூராய்வு கமிட்டியால் தீர்மானிக்கப்பட்டது.

கூராய்வு கமிட்டியின் தீர்மானத்தின் படியும் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க வழிகாட்டுதலின் படியும் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மொடச்சூர் வாரச்சந்தை வளாகத்தில் உள்ள வீடற்றோர் இரவு நேர தங்கும் விடுதியினை நிர்வகிக்க மற்றும் பராமரிக்கும் பணியினை மேற்கொள்ள அட்சயம் டிரஸ்ட், எஸ்.கே.எம் ஸ்ரீ குரூப் பில்டிங்க் காந்திஜி ரோடு, ஈரோடு. என்ற தொண்டு நிறுவனத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டிற்கு அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடற்றவர்களை மட்டும் இவ்விடுதியில் அனுமதிக்கப்படவேண்டும்.
2. நகராட்சிக்கு சொந்தமான வீடற்றோர் இரவு நேர தங்கும் விடுதியில் தங்கும் பயனாளிகளின் விவரங்களை உடனுக்குடன் காவல்துறைக்கு அனுப்பப்பட வேண்டும். மற்றும் தங்குபவர்களின் விவரங்கள் பதிவேட்டில் பதிவு செய்து, நகராட்சி சுகாதார ஆய்வர் மற்றும் சுகாதார அலுவலரிடம் கையொப்பம் பெற வேண்டும் .
3. இவ்விடுதியில் தங்கும் பயனாளிகளிடம் எவ்வித கட்டணமும் வசூலிக்கக்கூடாது.
4. இவ்விடுதியின் கட்டிடங்களில் நகராட்சியின் அனுமதியின்றி எவ்வித மாற்றமும் செய்யக்கூடாது.
5. இவ்விடுதிக்கென ஒதுக்கப்பட்ட கட்டிடத்தின் மட்டும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கூடுதலாக எவ்வித ஆக்கிரமிப்பும் செய்ய கூடாது.

6. இவ்விடுதிக்கென ஒதுக்கப்பட்ட கட்டிடத்தில் இரவு நேர தங்கும் விடுதிக்கு மட்டுமே பயன்டுத்தப்பட வேண்டும். மற்ற விழாக்கள் கூட்டம் நடத்துதல், மற்றும் கலாச்சாரம் நிகழ்வுகள் நடத்தக்கூடாது.
7. இவ்விடுதியில் தங்கும் பயனாளிகளுக்கு உடல்நிலையில் ஏதேனும் நோய் வாய்ப்பட்டால் உடனுக்குடன் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.பயனாளிகளுக்கு அவசர சிகிச்சை தேவைப்படும் சமயத்தில் மருத்துவர் 24 மணிநேரம் தொடர்பு கொள்ளும் வகையில் பார்த்துக்கொள்ளவும்.
8. இவ்விடுதியில் சட்டத்திற்கு புறம்பான மற்றும் முறைகேடான செயல்கள் ஏதும் தங்களாளோ மற்றவர்களாளோ ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.அவ்வாறு நிகழ்வுகள் தெரியவந்தால் தங்களது உரிமம் எவ்வித அறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.
9. இவ்விடுதியினை நிர்வகிக்க மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினங்களை சேவை மனப்பான்மையுடன் இலவசமாக மேற்கொள்ள வேண்டும். இதற்கென நகராட்சியால் எவ்வித நிதி ஆதாரமும் வழங்க இயலாது.
10. இவ்விடுதியின் மின்கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம். ஆகியவற்றை நகராட்சியே ஏற்றுக்கொள்ளும்.இதற்கென ஒதுக்கீடு செய்யப்படும் குறியீட்டை விட கூடுதலாகக்கூடாது.
11. நகராட்சியால் இவ்விடுதியினை எவ்வாறு ஒப்படைக்கப்படுகிறதோ அவ்வாறே திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
12. 18 வயதுக்கு கீழ் உள்ள நபர்களை தங்க அனுமதிக்க கூடாது.
13. இவ்விடுதியில் ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக இடம் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.
14. இவ்விடுதிக்கென முழுநேரம் மேலாளர் என்கின்ற பதவியில் ஒரு நபர் நியமிக்கப்பட வேண்டும்.
15. இவ்விடுதிக்கென பராமரிப்பு பணியாளர்கள் Shifted முறையில் 3 நபர்கள் நியமிக்கப்பட வேண்டும். இதில் பெண்களை கவனிப்பதற்கென 1 பெண் பணியாளர் நியமிக்கப்பட வேண்டும்.
16. இவ்விடுதியில் அரசு அலுவலர்களை தவிர தனி நபர்களை பார்வையிட அனுமதிக்கக் கூடாது.
17. பார்வையாளர்கள் பதிவேடு மற்றும் புகார் பதிவேடுகள் கட்டாயமாக பராமரிக்கப்பட வேண்டும்.
18. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க வழிகாட்டுதலில் உள்ள நிபந்தனைகள் இதற்கும் பொருந்தும்.
19. இவ்விடுதியை பற்றி பொதுமக்களிடமிருந்து பத்திரிக்கைகளிலோ எவ்வித புகாரும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
20. இவ்விடுதியில் தங்களிடம் ஒப்படைப்பதற்கான ரூ.20/- மதிப்பிலான அரசு முத்திரைத்தாளில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிட்டு நோட்டரி வழக்கறிஞரின் சான்றொப்பம் பெற்று இவ்வலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.
21. சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இவ்விடுதியினை பார்வையிட அனுமதிக்கப்பட வேண்டும்.
22. இவ்விடுதியை சுகாதார அடிப்படையில் நன்கு பராமரிக்கவும் அவ்வப்போது ஏற்படும் சுற்றுப்புற சூழ்நிலைக்கு தகுந்தவாறு பராமரிக்கப்பட வேண்டும்.
23. இவ்விடுதியை நகர்மன்றத் தலைவர், நகர்மன்ற துணைத் தலைவர், மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் பார்வையிட அனுமதிக்கப்பட வேண்டும்.

**அலுவலகக்குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்
**அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.359**

16. இந்நகராட்சியில் தூய்மை பாரத இயக்கம் (2.0)(SBM) 2022-23 திட்டத்தின் கீழ் கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கரட்டூர் உரக்கிடங்கில் தரை மட்டத்திற்கு கீழே உள்ள குப்பைகளை அகற்றுதல் பணியினை ரூ.127.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை செய்வதற்கு 06.01.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோராப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளார்கள் .

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொழில்நுட்ப தகுதி விவரம் |
|---|---|---|
| 1. | M/s. ஓரியண்ட் பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் எண்.21/A யாகப்பா நகர் , தஞ்சாவூர் . | தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளார் |
| 2. | M/s. GM கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அன்ட் இன்ப்ரா பிரைவேட் லிமிடெட் , எண்.8 வது குறுக்கு தெரு தஞ்சாவூர் . | தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளார் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் இரண்டு ஒப்பந்ததாரர்களுடைய ஒப்பந்த விலை பட்டியலில் (Price Bid) திறக்க 11.01.2023 ல் அறிவிப்பு வழங்கப்பட்டு விலைப்புள்ளி திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.ஓரியண்ட் பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், எண்.21/A யாகப்பா நகர் , தஞ்சாவூர் . | 0.10 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2. | M/s. GM கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அன்ட் இன்ப்ரா பிரைவேட் லிமிடெட் , எண்.8 வது குறுக்கு தெரு தஞ்சாவூர் . | 0.07 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டை விட 0.10% சதவீதம் குறைவாக வழங்கியுள்ள M/s. ஓரியண்ட் பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 2839/2022 /இ1)

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

அ.). .மன்றம் அனுமதிக்கலாம்

ஆ). மேற்படி பணிகளில் வ.எண்.1 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.ஓரியண்ட் பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

இ). பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1) அனுமதிக்கப்பட்டது ஆ) மற்றும் இ) ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**மன்றத்தீர்மான எண்.360**

17. இந்நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து 31.12.2008ல் ஓய்வு பெற்ற திரு.ஜி.மணி என்பவர் துறை தேர்வு கணக்கு தேர்ச்சி பெற்றமைக்கு வழங்கப்பட்ட ஊக்க ஊதிய உயர்வினை அவர்கள் பதவி உயர்வில் செல்லாததினால் அவருக்கு வழங்கப்பட்ட ஊக்க ஊதிய உயர்வினை பிடித்தம் செய்ததற்கு அட்சேபித்து சென்னை உயர்நீதி மன்றத்தில், உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரை முதல் பிரதிவாதியாகவும், இந்நகராட்சி ஆணையாளர் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாகவும் சேர்த்து தொடரப்பட்ட வழக்கு எண்.4527/2010–இல்

வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின் படி திரு.ஜி.மணியிடம் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.36,626/- ஐ 08.02.2017ல் அவருக்கு திருப்பி வழங்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து இவரால் உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநர் முதல் பிரதிவாதி மற்றும் இந்நகராட்சி ஆணையாளர் இரண்டாம் பிரதிவாதி ஆகியோர்கள் மீது தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.1612/2018 –ல் அவருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஓய்வு பெற்ற இளநிலை உதவியாளர் திரு.ஜி.மணி தனக்கு ஊதிய திருத்தம் மறு நிர்ணயம் செய்துள்ளபடி திருத்திய ஓய்வூதிய பயன்களை அனுமதிக்க பரிசீலனை செய்ய வேண்டி உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரை முதல் பிரதிவாதியாகவும், இந்நகராட்சி ஆணையாளர் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாகவும் சேர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.WP.No.21465/2019 ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் சென்னை உயர்நீதி மன்றத்தில் திரு.B.ஆனந்த் வழக்கறிஞர் இந்நகராட்சி சார்பில் வாதாடவும், அவருக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.20,000/- ஐ (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2135/2012/சி1)

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.361**

18. இந்நகராட்சியின் வார்டு எண். 18, நேரு வீதியில் செயல்பட்டு வரும் நகராட்சி மயானத்தில் இறந்தவர்களின் உடல்கள் மண் அடக்கம் செய்யப்பட்டும், எரியூட்டப்பட்டும் வருகிறது. இம்மயானத்திற்கு மயானக் காவலர் பணியிடம் ஏதும் இந்நகராட்சியில் இல்லை. இந்நிலையில் கோபிசெட்டிபாளையம் உழவன் ரோட்டரி சங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் இம்மயானத்தின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார்கள். எனவே, பொது மக்களுக்கு ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் பொருட்டும், சிறப்பான சேவையை வழங்கும் பொருட்டும், மேற்குறிப்பிட்ட மயானத்தின் பராமரிப்பு பணிகளை கோபிசெட்டிபாளையம் உழவன் ரோட்டரி சங்கத்திற்கு பரிசார்த்த முறையில் ஒராண்டு காலத்திற்கு ஒப்படைப்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 101/2023/எச்1)

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் முடிவு செய்யலாம்.
**அரசு வழிகாட்டுதலின்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மான எண்.362**

19. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை-28 அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்: 33552/2022/EA2-SWM-4, நாள்:10.01.2023-ன்படி இந்நகரில் உள்ள 30 வார்டுகளில் உள்ள வீடுகள், கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றில் உருவாகும் கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் முதல் நிலை சேகரம் செய்யும் பணியினை மேற்கொள்ள, 3 ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி தகுந்த சேவை வழங்குநரை தேர்வு செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்நகராட்சியின் நிரந்தர பணியாளர்களை கொண்டு மேற்கொள்ள இருக்கும் பணிகளான சாக்கடை சுத்தம் செய்தல், தெருக்கள் மற்றும் சாலைகளை சுத்தம் செய்தல், பேருந்து நிலையம், வாரச்சந்தை, தினசரி சந்தை போன்றவற்றில் உருவாகும் கழிவுகளை சேகரித்தல், நுண் உர மையம், வள மீட்பு மையம், உயிரி எரிவாயு கூடம், போன்றவற்றில் மேற்கொள்ளப்பட உள்ள திடக்கழிவு மேலாண்மை பணிக்களுக்கு தேவையான வாகனங்கள் போக மீதம்முள்ள வாகனங்களை ஒப்பந்ததாரருக்கு வாடகை அடிப்படையில் வழங்கி பணி மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்நகராட்சியில் உள்ள நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் மற்றும் வாகனங்களை பின்வரும் விவரப்படி ஒதுக்கீடு செய்து பணி மேற்கொள்ளவும் உத்திரவிடப்பட்டுள்ளது.

**அதன் விவரம் பின்வருமாறு :**

| **பணியின் விவரம்** | **ஈடுபடுத்த வேண்டிய பணியாளர்களின் எண்ணிக்கை** | **ஈடுபடுத்த வேண்டிய வாகனங்களின் விவரம்** |
|---|---|---|
| நுண் உரக் கூடங்கள், உயிரி எரிவாயு கூடம் போன்றவற்றில் மேற்கொள்ளப்படும் பணிகள். | 12 பணியாளர்கள் | – |
| வள மீட்பு மையம், | 3 பணியாளர்கள் | – |
| பூங்கா சுத்தம் செய்தல் | 4 பணியாளர்கள் | – |
| பேருந்து நிலையம் | 9 பணியாளர்கள் | BOV – 1 |
| சந்தை | 7 பணியாளர்கள் | HCV – 1 |
| புல் செடிகள் அகற்றும் பணி | 6 பணியாளர்கள் | |
| சாக்கடை சுத்தம் செய்தல் | 15 பணியாளர்கள் | BOV – 1 |
| பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் சுத்தம் செய்தல் | 12 பணியாளர்கள் | – |
| மலேரியா நோய் தடுப்பு பணிகள், புகை தெளிக்கும் பணிகள் | 5 பணியாளர்கள் | – |
| தெருக்கள் மற்றும் சாலைகள் சுத்தம் செய்தல் | 15 பணியாளர்கள் | BOV – 1 |
| **மொத்தம்** | **88 பணியாளர்கள்** | **BOV – 3<br>HCV – 1** |

ஒப்பந்த அடிப்படையில் முதல் நிலை சேகரம் செய்யும் பணிக்கு ஆகும் செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் பின்வரும் விவரப்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**அதன் விபரம் :**

| Quantity of waste Generated (TPD) | Rate Per Tonne (in Rs.) | Estimated Base Cost per day (Rs. In Lakh) | Estimated base cost per year (Rs. In lakh) | Applicable GST 18% and LWF 1% (Rs. In lakh) | Estimated total cost per year (Rs. In lakh) |
|---|---|---|---|---|---|
| 17.54 | 5642.48 | 0.99 | 361.40 | 68.66 | 430.01 |

தினமும் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் முதல்நிலை சேகரத்தில் இந்நகராட்சியில் 17.54 டன் திடக்கழிவுகள் உருவாகும் என கணக்கிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், திடக்கழிவுகள் டன் ஒன்று சேகரித்து ஒப்படைக்க ரூ.5642.48/– வீதம் ஒப்பந்ததாரருக்கு வழங்கிடவும், ஆண்டு ஒன்றுக்கு GST உட்பட ஆகும் செலவினம் ரூ. 430.01/– இலட்சத்திற்கும் இதற்கான Service Charge (if applicable) சேர்த்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**சேவை வழங்குநர் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் விபரம் :**

| வ. எண் | பணியின் விவரம் | எண்ணிக்கை | பணியாளர்கள் எண்ணிக்கை (as per KPI indicators) | வாகனங்கள் எண்ணிக்கை (as per KPI indicators) | ஓட்டுநர்கள் எண்ணிக்கை (as per KPI indicators) |
|---|---|---|---|---|---|
| 1 | வீடுகள் தோறும் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும், மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து தள்ளுவண்டியில் சேகரிக்கும் பணி | 3083 வீடுகள் | 22 பணியாளர்கள் | 21 Pushcarts | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | வீடுகள் தோறும் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும், மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து BOV வாகனங்கள் மூலம் சேகரிக்கும் பணி | 7979 வீடுகள் | 42 பணியாளர்கள் | 20 BOV's | – |
| 3 | வீடுகள் தோறும் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும், மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து LCV வாகனங்கள் மூலம் சேகரிக்கும் பணி | 7073 வீடுகள் | 28 பணியாளர்கள் | 9 LCV's | 9 ஓட்டுநர்கள் |
| 4 | சிறு வணிக நிறுவனங்களில் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும் மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து LCV வாகனங்கள் மூலம் சேகரிக்கும் பணி | 2859 சிறு வணிக நிறுவனங்கள் | 13 பணியாளர்கள் | 6 LCV's | 6 ஓட்டுநர்கள் |
| 5 | பெரும் வணிக நிறுவனங்களில் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும் மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து HCV வாகனம் மூலம் சேகரிக்கும் பணி | 806 பெரும் வணிக நிறுவனங்கள் | 4 பணியாளர்கள் | 1 HCV | 1 ஓட்டுநர் |

மேற்கண்டவாறு ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளும் பணிகளுக்கு தேவையான வாகனங்களில் 18 தள்ளுவண்டிகள், 11 BOV வாகனங்கள் மற்றும் ஒரு HCV வாகனம் வாடகை அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு இந்நகராட்சியில் இருந்து வழங்கவும், அதற்கான நாள் வாடகை முறையே தள்ளுவண்டிக்கு ரூ. 10/–, BOV வானத்திற்கு ரூ. 100/– மற்றும் HCV வாகனத்திற்கு ரூ.400/– என்னும் விலைவிகித அடிப்படையில் ஒப்பந்ததாரரின் மாதாந்திர பட்டியலில் பிடித்தம் செய்து கொள்ளவும், இதர வாகனங்கள் மற்றும் அதற்கான ஓட்டுநர்கள் மற்றும் 5 மேற்பார்வையாளர்களை ஒப்பந்ததாரரே தனது சொந்தப் பொறுப்பில் அமர்த்தி கொள்ளும் வகையிலும், இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி தகுந்த ஒப்பந்ததாரரை தேர்வு செய்து 01.04.2023 ஆம் தேதி முதல் ஒப்பந்ததாரர் மூலம் இப்பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், நகராட்சி பொது நிதியில் பற்றாக்குறை ஏற்படும் நேர்வுகளில் அரசால் வழங்கப்படும் 15வது CFC SWM tied grant இல் செலவு செய்து கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு 1) அனுமதிக்கப்பட்டது**
**2) அனுமதிக்கப்பட்டது.**
**3) பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.363**

(ஒப்பம்) – என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி